DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.6**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அசோகன் |
| Father Name | : | நடராஜன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026.

(1, 2 மறறும் 7 வது எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11 வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 9, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 8வது எதிரி ஆஜர் இல்லை. 8வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை டிவிஎஸ் நகர், மீனாட்சி ரோடு, கதவு எண்.E331 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்தவர் என் உடன்பிறந்த தம்பி ஆவார். நான் 31.01.2013ம் தேதி எனது நண்பர் வீட்டிற்கு சென்றிருக்கும் போது **அ.சா.3** அசோகன் என்பவர் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு எனது தம்பி சுரேஷ்பாபுவை நபர்கள் வெட்டிவிட்டதாக இரவு 07.30 மணிக்கு தகவல் சொன்னார். நான் இரவு 08.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தேன். நான் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தேன், சம்பவ இடத்திற்கு அம்புலன்ஸ் வந்தது, அங்கு காவல்துறை அதிகாரிகளும் இருந்தார்கள். எனது தம்பி சுரேஷ்பாபுவின் பிணத்தை ஆம்புலன்ஸ்ல் ஏற்றி மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு மருத்துவர் திரு.நடராஜன் என்பவர் அன்று இரவே எனது தம்பி சுரேஷ்பாபு பிணத்தை பிணக்கூறாய்வு செய்தார். எனது தம்பி சுரேஷ்பாபுவின் உடலின் பல பகுதிகளில் சுமார் 28 இடங்களில் வெட்டு காயங்கள் இருந்ததை பார்த்தேன்.

மேலும் காவல் துறை அதிகாரிகள் எனது தம்பி சுரேஷ்பாபுவின் பாக்கெட்டில் இருந்து ரூ.28,000/- ரொக்க பணம், அவருடைய தங்க மோதிரம், தங்க செயின் மற்றும் அவர் கையில் கட்டியிருந்த தாயத்து, மற்றும் கை கடிகாரம் ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் அங்கிருந்த என்னுடைய மூத்த சகோதரர் என். குமார் அவர்களிடம் மேற்படி பொருட்களை ஒப்படைத்துவிட்டேன். மறுநாள் காலையில் 10.30 மணிக்கு மேல் எனது தம்பி சுரேஷ்பாபுவின் பிரேதத்தை என்னிடத்தில் ஒப்படைத்தார்கள். நாங்கள் எனது தம்பி சுரேஷ்பாபுவின் பிரேதத்தை வீட்டிற்கு எடுத்துச்சென்று வீட்டின் வெளியே பொதுமக்கள் பார்வைக்கு வைத்தோம். அதன்பிறகு எனது தம்பி சுரேஷ்பாபுவின் பிரேதத்தை கீரைத்துறை மயானத்தில் வைத்து எரியூட்டடப்பட்டது. மறுநாள் எனது தம்பி சுரேஷ்பாபுவின் அஸ்தியை பெற்று திருப்புவனம் ஆற்றில் கரைத்தோம். போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.03 16:28:51 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.